

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளிடம் கலந்துரையாடி அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 17 - திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கொழுமம் - பழனி முதன்மைச் சாலையிலுள்ள சாவடியின் முகப்பு மேற்கூரை இன்று (16.10.2023) காலை எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்ததில் முரளி ராஜா, த/பெ. மன்மதன் (வயது 35), கௌதம், த/பெ.சின்னதேவன் (வயது 29) மற்றும் மணிகண்டன், த/பெ. பாபு (வயது 28) ஆகிய மூவரும் பலத்த காயமடைந்து, அவர்களை உடுமலைப்பேட்டை அரசு பொதுமருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த மூவரையும் இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.




மாண்புமிகு. மா.சுப்பிரமணியன் B.A.,LLB

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்

அவர்களின் இளைய மகன்

சு.அன்பழகன்

3 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

நாள்: 17.10.2023 செவ்வாய்க்கிழமை

அன்பின் நினைவுகள் அழியாது - அது
ஆகாயம் உள்ளவரை அகலாது

என்றும் நன்றியுடன்

கோல்டு டி.பிரகாஷ்

செயலாளர் செங்கை - காஞ்சி மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கம்


பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள

# மகளிர் ஒப்பனை அறைகள் வாகனத்தை பராமரிப்பது அனைவரின் பொறுப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளத்தில் பதிவு!

சென்னை, அக். 17- பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள மகளிர் ஒப்பனை அறை வாகனத்தை பராமரிப்பது நம் அனைவரின் பொறுப்பு என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "She Toilet" எனும் இந்தப் பாராட்டத்தக்க முன்னெடுப்பைத் தூய்மையாகப் பராமரிப்பது நம் அனைவரது பொறுப்பு!**

**அதனை உறுதிசெய்யுமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# மகளிர் ஒப்பனை அறை வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள She - Toilet மகளிர் ஒப்பனை அறை வாகனம் தொடர்பாக, 'பிங்க் கலரில் வந்த தோழி' என்ற தலைப்பிலும், 'மகிழ்ச்சியில் மாநகரப் பெண்கள்' என்ற துணைத் தலைப்பிலும் வெளியான கீழ்க்காணும் கட்டுரையொன்றை இணைத்து தமது பாராட்டை பகிர்ந்துள்ளார்.



'மகளிர் ஒப்பனை அறை' வாகனங்கள்

பிங்க் கலரில் வந்த தோழி

மகிழ்ச்சியில் மாநகர பெண்கள்